**நகராட்சி அலுவலகம்,**

**சாத்தூர்.**

**நாள்: 23.11.2024**

**---------------**

**<u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>**

**<u>கூட்டம் எண். 30</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் கார்த்திகை 10 ஆம் நாள் 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 25.11.2024ம் தேதியன்று திங்கள்கிழமை காலை 12.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்.1</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் லாரி வாகனம் TN 67 A 7796 வண்டிக்கு புதியதாக பேட்டரி சப்ளை செய்ய 23.10.2024-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 2 விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதற்க்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் , சாத்தூர் - ரூ. 16,000
2. சாந்தா ஸ்பேர் சர்வீஸ் சாத்தூர் - ரூ. 16,600

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள் 23.10.2024-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், சாத்தூர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 547/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.522, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 தகுதி சான்று பெற பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 16.10.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | - | ரூ.1,23,280/- |
| 2. | வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் | - | ரூ.1,17,410/- |

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை ரூ.1,18,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.463 நாள்:30.07.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 314/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.523, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 3</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய ஜெட்ராய்டு வாகனம் TN 67 BK 1057 தகுதி சான்று பெற பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 16.10.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | - | ரூ.98,401/- |
| 2. | வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் | - | ரூ.93,715/- |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.94,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.462 நாள்:30.07.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 315/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.524, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

சாத்தூர் நகராட்சியில் ஆணையருக்காக வாங்கப்ட்ட பொலிரோ ஜீப் வாகனம் TN 67 BP 1251 63000 கி.மீ பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான காலமுறை பராமரிப்பு பணிகளான கீழ்க்கண்ட பணிகளை மகேந்திரா & மகேந்திரா டீலர் மதுரை கப்பலுர் சர்வீஸ் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. ஆயில்சர்வீஸ், ஆயில் பில்டர்,டீசல் பில்டர் புதியது மாற்ற வேண்டும்.
3. 4 வீல் கீரிஸ் பேக்கிங் மற்றும் பிரேக் லைனில் செக்கப் செய்ய வேண்டும்.
4. காலையில் வண்டி ஸ்டாட் செய்யும் போது இஞ்சின் ஸ்டாட் ஆகவில்லை சென்சர்,செல்ப்மோட்டார் சரி செய்ய வேண்டும்.
5. இரண்டு ஆரன் புதியது மாற்ற வேண்டும்.
6. பிரிஸ்டோன் டயர் 215/75 R15-100H புதியது மாட்ட வேண்டும்,
7. வீல் அலாய் மெண்ட்டு பார்க்க வேண்டும்.
8. கிலோ மீட்டர் 63000-க்கான செக்கப்கள் அனைத்தும் செய்ய வேண்டும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 552/2023/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.525, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் உள்ள அண்ணா தினசரி சந்தை கடைகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கடைகள் ஆகும். மேற்கூரை இடிந்து

விழுந்துள்ளது எனவே பொதுமக்களின் நலன் கருதி உடன் இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1064/2017/ சி2)

நகர்மன்றத் தீர்மானம் எண்.526, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோக பராமரிப்பு, குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.15,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 583/2024/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.527, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.,15,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 582/2024/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.528, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

சாத்தூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை தினத்தந்தி தொழில்மலரில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.14,490/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 322/2018/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.529, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் லாரி வாகனம் TN 67 B 7759 வண்டிக்கு தகுதி சான்று பெற வண்டியில் உள்ள பழுது பார்க்கும் பணியினை மதுரை டி,வி,எஸ் நிறுவனத்தில் பார்க்கவும் அதற்க்கான செலவு தொகை 1,25,000 க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது,

பழுது விபரம்

1. Complete Water Wash.
2. Engine Oil Service & Fuel Filter Change.
3. Gear Box Oil, Crown Oil Steerring Oil, Cooland Oil.
4. All Wheel Grease Packing and Oil Seal Change.
5. R&R Clutch and over Hauling.
6. Joint over Hauling .
7. Selfmotor over hauling.
8. 13/4 Water Hose 100 Feet.
9. 100 Feet Wire 1.5MM .
10. 13/4 Gate Valve.
11. Complete Tinkering work.
12. Complete Body Paste Work.
13. Complete Spary Painting Work .
14. Complete Letter Write Work.
15. Complete Electrical Work.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2014/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.530, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

சாத்தூர் நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை கட்டும் பணி முழுமையாக முடிக்கப்பட்டு அதனை வருவாய் பிரிவின் மூலம் குத்தகைக்கு விட பொறியியல் பிரிவில் குறிப்பு பெறப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி கட்டணக் கழிப்பறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு குளியலறையும், ஒரு வெஸ்டர்ன் கழிப்பறையும் மற்றும் இரண்டு சாதாரண கோப்பையும் உள்ளது. எனவே அதற்கு வைப்புத்தொகை ரூ.2,50,000/-ம், கூடுதல் வைப்புத்தொகை ரூ.2,00,000/-ம், மின் இணைப்பு வைப்புத் தொகையாக ரூ.20,000/-ம் நிர்ணயம் செய்யவும், மேற்படி கட்டணக் கழிப்பறையை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்குவிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் மேற்படி கட்டணக் கழிப்பறையை மக்கள் நலன் கருதி பயன்பாட்டுக்கு கொண்டு வரவும், வருவாய் நிதியினை அதிகப்படுத்தவும் மற்றும் வருவாய் இழப்பினை தவிர்க்கவும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஏலம் போகாத இனத்தோடு சேர்த்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை ஏல அறிவிப்பு அறிவிக்கவும் மன்றத்தின் முன்அனுமதி வேண்டி நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)

நகர்மன்றத் தீர்மானம் எண்.531, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பணிகளில் சாத்தூர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு திரு.எம்.கண்ணன் வழக்கறிஞர் அவர்களால் ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்தப்பட்டு வரப்பட்டுள்ள பில் தொகை தனித்தனியாக உள்ளது. அவை

| வ. எண் | பில் தேதி | வழக்கு எண் | Details of Parties | பில் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 25.09.2023 | Contempt Pet: (MD0 No.1114 of 2014 | திரு.கீதாராமன் | 12000 |
| 2 | 13.07.2021 | WP No.6632 of 2021 | திரு.ஆர்.முரளிதரன் | 15000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 13.03.2023 | WP No.3928 of 2025 | நியூ தனலெட்சுமி பிக்கீஸ் (P) Ltd., | 15000 |
| 4 | 16.06.2023 | WP No.12279 of 2020 | திரு.கலையரசன் | 15000 |
| 5 | 16.06.2023 | WP No.11427 of 2023 | சாத்தூர் டவுண் யாதவ் சமுதாய சங்கம் | 15000 |
| 6 | 16.06.2023 | WP No.6345 of 2023 | ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி | 15000 |
| 7 | 16.06.2023 | WP No.23700 of 2018 | ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி | 15000 |
| 8 | 16.06.2023 | WP No.7230 of 2023 | ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேசன் பள்ளி | 15000 |
| 9 | 15.02.2023 | WP No.6710 of 2021 | திரு.கே.இருளப்பன் | 15000 |
| 10 | 15.02.2024 | WP No.23113 of 2021 | திரு.எம்.தனராஜ் | 15000 |
| 11 | 15.02.2024 | WP No.10796 of 2022 | திருமதி.நளினி | 15000 |
| 12 | 15.02.2024 | WP No.4013 of 2023 | திரு.அய்யப்பன் | 15000 |
| | | | **மொத்தம்** | **177000** |

மேற்படி அனைத்து 12 வழக்குகளும் முடிக்கப்பட்டு வரப்பட்டுள்ள மொத்த தொகை ரூ.1,77,000/-த்தினை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் அவர்களுக்கு காசோலையாக வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பணிந்து வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

வழக்கு கட்டணத்தை திரு.எம்.கண்ணன் வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.612/2024/அ1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.532, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 12</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் மற்றும் குத்தகை மாத வாடகை இனங்களுக்கு 03.12.2024ம் தேதி பொது ஏல அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை விளம்பரத்தாளில் ஏதேனும் சிறியதாக அரசு நிர்ணயித்த விலை விகிதத்தில் ஒரு பதிப்பில் மட்டும் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவுத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)

நகர்மன்றத் தீர்மானம் எண்.533, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023ம் தேதிய ந.க.எண்.32945/2022/EA2-SWM/2021 செயல்முறை ஆணையில் சாத்தூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்காக வீடுவீடாக குப்பை வாங்குதல், வணிக நிறுவனங்களில் குப்பைகள் சேகரித்தல் போன்ற பணிகளை தனியார் சேவை வழங்குபவர்/முகமை/ஒப்பந்த்தாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள உரிய வழிகாட்டுதலுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.817/2022/எச்1, நாள்.05.05.2023ம் தேதிய வேலை உத்தரவின்படி 05.05.2023 முதல் ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள ராம்&கோ மதுரை வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு ஒரு டன் குப்பைக்கு ரூ.5121/- வீதம் உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 23.10.2024 அன்று நடைபெற்ற தீர்மானத்தில் தீர்மான எண்.520ன்படி, 04.10.2024 அன்று 01.08.2024 முதல் 10 சதவீதம் அதிகப்படுத்தியும், 01.09.2024 முதல் 31.05.2025 வரை பணி நீட்டிப்பு செய்தும் மன்றத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்ட நிலையில் தற்போது அந்நிறுவனத்தின் 14.11.2024ம் தேதிய கடிதத்தில் ஜீன் & ஜீலை மாத்த்திற்கும் 10 சதவிகிதம் Tripping Fees அதிகப்படுத்தி வழங்கக்கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. ஜீன் மாதத்தில் பாராளுமன்றத் தேர்தல்-2024 நடத்தை விதிகள் அமுலில் இருந்த்தால் ஜீன் மற்றும் ஜீலை மாத்த்திற்கு Tripping Fees 10 சதவிகிதம் தொகை கூடுதலாக வழங்க இயலாத சூழ்நிலை இருந்தது. எனவே ஜீன்-2024ம் மாதத்திற்கு Final Bill தொகை முழுவதும் 16.10.2024 அன்று வழங்கப்பட்டது. மேற்படி தற்போது ஜீன்-2024ம் மாதத்திற்கான Tripping Fees 10 சதவிகிதம் தொகை மட்டும் கூடுதலாக வழங்கவும், ஜீலை-2024ம் மாதத்திலிருந்து மொத்தத் தொகைக்கும் Tripping Fees 10 சதவிகிதம் தொகை கூடுலாக வழங்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.817/2022/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.534, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், நகராட்சி பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் 100 சதவீகிதம் பாதுகாப்பான முறையில் கழிப்பறையை பயன்படுத்தி, திறந்தவெளியில் மலஜலம் கழித்தல் இல்லாத மற்றும் பாதுகாப்பான முறையில் கசடு கழிவுநீர் மேலாண்மை செயல்பட்டு வருவது தொடர்பான OPEN DEFECATION FREE++ தரச்சான்று மற்றும் குப்பை இல்லாத நகரம் GARBAGE FREE CITY - 3 Star **தரச்சான்று** பெற விண்ணப்பிக்க இயக்குநர், தூய்மை பாரத இயக்கம், புதுடெல்லி அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகரினை ODF++ தரச்சான்று மற்றும் GFC 3 STAR தரச்சான்று பெற, அறிவிப்பு வெளியிடுவதற்கும் பொது மக்களிடம் ஆட்சேபனை கோரியும் 4 தினசரி நாளிதழில்களில் விளம்பரம் செய்யவதற்கு உத்தேச செலவினத் தொகையை ரூ.30000/- ஆகும். எனவே பொதுசுகாதார துறையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இயக்குநர், தூய்மை பாரத இயக்கம், புதுடெல்லி அவர்களின் 17.10.2024ம் தேதிய அறிக்கையின்படி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.594/2024/H1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.535, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த தேவையான மருந்து Pyrethrum 2% Extract பருவ மழை மற்றும் தொற்று நோய் எளிதில் பரவ கூடிய காலங்களில் தேவையான அளவு இருப்பில் வைத்திருக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். எனவே தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் (TNMS) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து மேற்படி சேவை கழகம் நிர்ணயித்துள்ள விலையில் 200 லிட்டர் Pyrethrum 2% Extract வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார துறையின் அவசரஅவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.626/2024/H1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.536, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

சாத்தூர் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்றும் பணிகள் மேற்கொள்வதற்காக பயன்படுத்தி வரும் TN 67 AJ 6058 டாடா ஏ.சி.இ வாகனத்தின் தகுதி சான்று 13.10.2024 அன்று முடிவடைந்து விட்டதால், மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறவதற்காக வாகனத்தில் உள்ள பழுதுகளை உத்தேச செலவினத் தொகையை ரூ.49,000/- ஆகும். எனவே மேற்படி பணியின் அவசரஅவசியம் கருதி வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார துறையின் அவசரஅவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 587/2024/H1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.537, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் சராசரியாக தினந்தோறும் 10டன்-க்கு அதிகமான குப்பைகளை தனியார் திடக்கழிவு மேலாண்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வற்றில் மக்கும் குப்பைகள் 4 டன் மற்றும் மக்காத குப்பைகள் 3 டன்கள் என பிரிக்கப்பட்டு இவ்வற்றில் மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் கூடம் மூலம் உரம் தயாரிப்பு செய்திடவும், மக்காத குப்பைகளை மறுசுழற்சிக்கும் பிரித்து தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது, மீதம் உள்ள 3 டன் இதர கழிவுகள் நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் கொட்டஃப்பட்டு வருகிறது. மேலும் அவ்வாறு கொட்டப்பட்டு வரும் குப்பை மோடுகளை சமன் செய்வதற்கு ஏதுவாக JCB வாகனத்தினை பயன்படுத்தி, சேகரித்து கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்திடவும், அதற்கு மாதம்தோறும் உத்தேசமாக ரூ.9000/- வீதம் (12 மாதத்திற்கு 12X9000) ரூ.108000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.625/2024/H1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.538, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

சாத்தூர் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்றும் பணிகள் மேற்கொள்வதற்காக பயன்படுத்தி வரும் TN 67 AJ 6058 டாடா ஏ.சி.இ வாகனத்தின் டயர் தேய்ந்து விட்ட படியால், மேற்படி வாகனத்திற்கு புதிய டயர்கள், டியூப்புகள் வாங்க Sri Guru Tyres என்ற நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே அந்நிறுவனத்தின் மூலம் வாகனத்திற்கு 4 எண்ணம் புதிய

டயர்கள் மற்றும் டியூப்புகள் வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகையை ரூ.17750/- ஆகும். எனவே மேற்படி பணியின் அவசரஅவசியம் கருதி வாகனத்திற்கு தேவையான டயர் மற்றும் டியூப்பு வாங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார துறையின் அவசரஅவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 588/2024/H1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.539, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 19

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் 200 mm DI Pipe தூர்ந்து போய் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே புதியதாக 200 mm DI Pipe மற்றும் கேபிள்கள் வாங்கி பதிக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 09.08.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.பா.சுப்பாராஜ் - மதிப்பீட்டை விட 0.03 சதவீதம் குறைவு
2. திரு.கனகராஜ் - மதிப்பீட்டை விட 0.56 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.5,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 470 நாள்:30.07.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.பா.சுப்பாராஜ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 363/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.540, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 20

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சங்கிலியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ஜி.ராம்குமார் என்பவர் அலுவலகத்திற்கு முறையாக தகவல் தெரிவிக்காமல் அடிக்கடி விடுப்பு எடுத்து வருகிறார். மேலும் இந்நகராட்சி பணிகளை சரியாக மேற்கொள்ளாமல் மிகவும் அலட்சியப்போக்குடன் இருந்து

வருகிறார். உயர் அதிகாரிகளின் வார்த்தைகளுக்கு கட்டுப்படாமலும், அலுவலகத்தில் பணிபுரியும் ஏனைய பெண் அலுவலர்களை தரக்குறைவாகவும், மது அருந்திவிட்டு தொலைபேசி வாயிலாக அவதூறாகவும் பேசி வருகிறார். மேலும் மாதத்தில் 10 நாட்கள் எவ்வித தகவலுமின்றி அலுவலகத்திற்கு விடுப்பில் சென்று விடுகிறார். மேலும் அன்னார் தான் ஊனமுற்றவன் என்பதைக் காரணம் காட்டி விடுமுறை நாட்களில் சுழற்சி பணிகளை முறையாக வருகை புரியாமல் உள்ளார். ஏற்கனவே இதுகுறித்து அன்னாரை பலமுறை எச்சரித்தும் அவர் தன்னை திருத்திக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் அதே தவறினை செய்து வருகிறார். இவருடைய இத்தகைய செயல்களினால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படக் காரணமாக இருந்து வருகிறார். எனவே அன்னாரை சாத்தூர் நகராட்சியிலிருந்து வேறொரு நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.764/2024/சி1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.541, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ச.குருசாமி,

நகர்மன்றத் தலைவர்,

சாத்தூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்

சாத்தூர் நகராட்சி.